# DEPOSTITION OF WITNESS

## IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL

## O.S. No. 98 of 2015

**Deposition of the Witness : CW1**

**Solemnly Affirmed by Thiru/Tmt. Bench Clerk in accordance with the provision of Act X of 1873.**

Name : சண்முகம்

Father's Name / Husband's name : சுப்பையா, தாலுக் சர்வேயர்.

Village : நாகர்கோவில்

Taluk : அகஸ்தீஸ்வரம்

Religion :

Age :

Date : 17.04.2026

**முதல்விசாரணை.**

நான் தற்போது உரிமம் பெற்ற சர்வேயராக பணிபுரிந்து வருகிறேன். எனது

அலுவலகம் முத்தமிழ் தெருவில் உள்ளது. கடந்த 04.02.2023 அன்று நான் இவ்வழக்கின் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையருடன் சேர்ந்து வாதி மற்றும் பிரதிவாதிகளின் சொத்தினை பார்வையிட்டு அளவீடு செய்து நீ.மா.சா.ஆ 2 வரைபடம் தயார் செய்து நீதிமன்ற ஆணையரிடம் கொடுத்தேன். நீ.ம.சா.ஆ 2 வரைபடத்தில் வாதி பிரதிவாதிகளின் சொத்து எந்த சர்வே நம்பரில் உள்ளது என்றால் கன்னியாகுமரி வில்லேஜ் சர்வே எண் 533/11ல் உள்ளது. நீ.மா.சா.ஆ 2 வரைபடங்கள் உள்ளது என்றால் சரிதான். நீ.மா.சா.ஆ 2-ல் வரைபடம் 1 வாதி பிரதிவாதிகளின் சொத்தினை கிடப்பின் படி அளவீடு செய்து வரையப்பட்டது என்றால் சரிதான்.

நீ.மா.சா.ஆ 2 ல் வரைபடம் 1ல் வாதி பிரதிவாதிகளின் சொத்துக்கள் மொத்தம் சேர்த்து எத்தனை விஸ்திரணம் என்றால் 4.875 சென்ட். நீ.மா.சா.ஆ 2ல் வரைபடம் 1ல் வாதியினுடைய சொத்து தெற்கு பக்கமும் பிரதிவாதிகளின் சொத்து வடக்கு பக்கமும் உள்ளது என்றால் சரிதான். நீ.மா.சா.ஆ 2ல் வரைபடம் 1ல் DEFGHI என்று குறிப்பிடப்பட்டுள்ளது பிரதிவாதிகளின் கைவசம் உள்ள கிடப்புபடி உள்ள விஸ்திரணம் 2.350 சென்ட் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.மா.சா.ஆ 2 ல் வரைபடம் 1ல் ABCD என்று குறிப்பிடப்பட்டுள்ளது வாதியின் கைவசம் உள்ள கிடப்புபடி உள்ள விஸ்திரணம் 2.350 சென்ட் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நீ.மா.சா.ஆ 2 ல் வரைபடம் 2 வாதி பிரதிவாதிகளின் சொத்தினை ஆவணங்களின் படி அளவீடு செய்து வரையப்பட்டது என்றால் சரிதான். நீ.மா.சா.ஆ 2 ல் வரைபடம் 2 ல் ABCDEF என்று குறிப்பிடப்பட்டுள்ளது பிரதிவாதிகளின் கைவசம் உள்ள ஆவணங்களின் படி உள்ள விஸ்திரணம் 2.125 சென்ட் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். நீ.மா.சா.ஆ 2 ல் வரைபடம் 2 ல் AGHB என்று குறிப்பிடப்பட்டுள்ளது வாதியின் கைவசம் உள்ள ஆவணங்களின் படி உள்ள விஸ்திரணம் 2.750 சென்ட் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.ஆவணங்களின் படி அளந்ததில் பிரதிவாதிகளின் சொத்து 2.125 சென்ட் ஆனால் பிரதிவாதிகளின் கைவசம் 225 சதுர அடி கூடுதலாக 2.350 சென்ட் உள்ளது என்றால் சரிதான்.

வாசாஆ 7 ஆவணம் நான் தயார் செய்த ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ 7 ன் படி பிரதிவாதிகளின் கைவசம் உள்ள வாதியின் சொத்தை சிவப்பு வண்ணம் தீட்டி 'C' காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 7 தயார் செய்யும் சமயத்தில் பிரதிவாதி மேற்படி 225 சதுர அடியில் வாதியின் சொத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டி வைத்திருந்தார் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**